2016 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

நீதிமன்றக் கட்டடம்

***2221—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டிலுள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என தவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) 6-வது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இன்றைக்கு 100-வது நாளில் அடியெடுத்து வைத்து, வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.*

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 ஆண்டுகளுக்குப் பிறகு ஆளுகிற கட்சியே மீண்டும்*

ஆட்சி அதிகாரத்தில் அமையப் பெற்றிருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) 100-வது நாளில் அடியெடுத்து வைத்திருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு, வரலாற்றில் இடம்பெறத்தக்க பல வெற்றிகளைக் குவித்து வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், நீதிமன்றங்கள் சீராகவும், செம்மையாகவும் செயல்படுவதற்காக நீதிமன்றக் கட்டமைப்பு வசதிகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில், 223 புதிய நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு, 486.26 கோடி ரூபாய் செலவில் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

நான் சார்ந்திருக்கின்ற திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில், அந்த நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட பள்ளிப்பட்டில் இடமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், பொது மக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் நலன் கருதி, எனது கோரிக்கையினை மறுபரிசீலனை செய்து, அடுத்த ஆண்டிலாவது பள்ளிப்பட்டில் அமையப் பெற்றிருக்கின்ற நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தில் ஒரு திருத்தம். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியிலே புதிய நீதிமன்றங்கள் மற்றும் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு 511.66 கோடி ரூபாய் செலவு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே புதிய நீதிமன்றக்

2016 ஆகஸ்ட் 31]

கட்டடங்கள் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கவில்லை என்று சொல்லவில்லை. எந்த நீதிமன்றத்தை அமைப்பதாக இருந்தாலும் சரி, கட்டடங்கள் கட்டுவதாக இருந்தாலும் சரி, உயர் நீதிமன்றத்திலிருந்து நமக்கு கோரிக்கைகள் வரப்பெறவேண்டும். அப்படி கோரிக்கை வரும்பட்சத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நீதித் துறையில் வழக்கறிஞர்கள் சேம நல நிதியை ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 5.25 இலட்சமாக உயர்த்திக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். இப்படி எண்ணற்ற சாதனைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு படைத்துவருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டில் இதற்கு உயர் நீதிமன்றத்திலிருந்து கருத்துரு வருமேயானால் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதியின் சார்பிலே நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டில் விரைந்து முடிக்க முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற திருவள்ளூர் மாவட்டத்திலே, இதுவரை அங்கு இயங்கிக்கொண்டிருக்கின்ற 37 நீதிமன்றங்களிலே 21 நீதிமன்றங்கள் சொந்தக் கட்டடங்களிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அனைத்து நீதிமன்றங்களுமே சொந்தக் கட்டடங்களிலே இயங்க*

வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கை. அந்த அடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற நீதிமன்றங்களில் 89.6 சதவீத நீதிமன்றங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற திருவள்ளூர் மாவட்டத்தில்கூட, மாவட்டத் தலைநகரமான திருவள்ளூரிலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு, 7 நீதிமன்றங்கள் உட்பட 8 நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்ட, இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் 23.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து கருத்துரு பெறப்பட்டால் கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Supplementary question கேட்க வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்பது கட்டாயம் இல்லை. சொல்வதைக் கேளுங்கள். நான் நேரத்தின் அருமை கருதி, நேரத்திற்குத் தகுந்த மாதிரி கேள்வி நேரத்தில் வாய்ப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் வாய்ப்புக் கேட்டால் உடனே தரவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். (குறுக்கீடுகள்) Supplementary question கேட்க வாய்ப்பு கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று கேட்பதாலே அவருக்கு வாய்ப்பு கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயமில்லை. நேரத்தின் அருமை கருதி எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். (குறுக்கீடுகள்) வாய்ப்பு வரும்போது கண்டிப்பாகக் கொடுக்கிறேன். (குறுக்கீடு)